புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 52. TML1191 - கம்பன் கண்டெடுத்த கம்பராமாயண பெண் முத்துக்கள்

இரா. அருணா,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்.
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு.

**ஆய்வுச் சுருக்கம்:**

*தமிழ் மொழியில் உருவான காப்பிய இலக்கியங்களில் மிகுதியான பெருமை பெற்றது கம்பர் இயற்றிய கம்பராமாயணம். காப்பியங்களில் ஒரு திருப்புமுனை என்றே கூறலாம். ஆழ்கடலில் மூழ்கி முத்து எடுப்பதுப்போல கம்பர் உருவாக்கிய கம்பராயணத்தில் கம்பரால் உருவாக்கப்பட்ட முத்துக்களை நாம் காணலாம். கம்பராமாயணத்தில் இடம்பெற்ற பெண் பாத்திரங்களில் வடிவமைப்பு பற்றியும், அவர்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளையும் இக்கட்டுரை மூலம் எடுத்துரைப்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.*

**முன்னுரை:**

*உலகில் தோன்றிய மொழிகளில் மூத்த மொழி தமிழ் மொழி ஆகும். தமிழ் மொழியில் இலக்கிய இலக்கண வளம் மிகுந்துள்ளது. உலக மக்கள் போற்றும் மொழி தமிழ்மொழி. தமிழ் மொழியில் சங்க இலக்கியம், இலக்கணங்கள் காப்பியங்கள், இதிகாசங்கள், சமய நூல்கள், தல புராணங்கள் என ஏராளமான வளங்கள் உள்ள ஒரே மொழி. அவ்வாறான பெருமைக்குரிய மொழியில் காப்பிய இலக்கியத்தில் பெருமை சேர்ந்தவர் கம்பர். கம்பர் இயற்றிய கம்பராமாயணம் காப்பியங்களில் ஒரு திருப்புமுனை என்றே கூறலாம்.*

**கம்பராமாயணம்:**

*“கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்” எனும் நாட்டார் வழக்கு வழியே கம்பனையும் கம்பாராமாயணத்தையும் நாட்டுப்புறத்தார் முதல் ஏட்டுப் புறத்தார் வரை பல நிலைகளில் தமிழ் மக்கள் அறிந்தும் புரிந்தும் கொண்டுள்ளனர். தமிழிரின் விழா எனுமாறு இன்று கம்பன் விழா நாட்டின் பல திசைகளிலும் நிகழ்ந்துவருவதைக்காண முடிகிறது. “கம்பன் என்றொரு மானுடன் இருந்ததும்” எனும் பாரதியின் தொடரினைத் தமிழிர்கள் இன்று வியந்து போற்றுகின்றனர்.*

*கிளைக்கதைகளும், துணைக்கதைகளும் இடைமிடைய நீண்ட நெடுங்காப்பியமாய் இதிகாசமாய் மலர்ந்துள்ள கம்பராமாயணத்தின் பெரு வெற்றி அதன் தொய்வற்ற கதைப்போக்கு, முரண்படா கதை மாந்தர் பண்பு நலன், உணர்ச்சி பொங்கும் நாடகத்தின், கற்பனை வளத்தின் எல்லை, உவமைகளின் பேராற்றல், கவித்துவத்தின் உச்சம், உளவியலின் ஆழமான வெளிப்பாடு, முன்னிகழ்வும் எவ்விதத்திலும் முரணாகாவாறு திறம்பட கொண்டுகூட்டியமைதல், நிகழ்வுகுளின் இசை நயம், தமிழ்க்கடலின் ஆழங்களை வெளிப்படுத்தும் சொல்லாட்சிப் பெருமை, தமிழ்ப்பண்பின் மாட்சி, உயரிய கோட்பாடுகள் என பலவற்றால் எதனாலும் அசைக்கவியலாவாறு ஆழ வேரூன்றியுள்ளது. “கல்வியில் பெரியவன் கம்பன்” எனும் வழக்குகள் அவரது படைப்புத்திறனுக்கு நற்சான்றாய் விளங்குகின்றது.*

**கதை மாந்தர்களின் வடிவமைப்பு:**

*முதன்மைக் கதை மாந்தர்களை அறத்தோடு தொடர்புபடுத்தியே காட்டுகின்றார். எதிர்நிலை மாந்தரான அரக்கரை அறங்கொள்ளாதவர் என கூறியுள்ளார். பெண் கதாபாத்திரங்களை,*

“பெருந்தடங்கண் பிறை நுதுலார்க் கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி வினைவன் யாவையே?“

*என்பது கம்பன் வாக்கு.*

*கம்பராமாயணத்தில் கோசலை நாட்டில் உள்ள பெண்கள் எல்லோருக்கும் போதுமான கல்வியும் செல்வமும் பெற்றுள்ளனர். அதனால் நாடி வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்குவதும் விருந்தளிப்பதுமான வாழ்க்கை அமைந்திருந்தது என்று கோசலத்துப் பெண்களைப் புகழ்ந்து கம்பர் பாடல் இயற்றியுள்ளார். "ஒண்டை இல்லை பல் வேள்வி ஓங்கலால்" என்ற வரி மூலம் வேத காலம் தொட்டுப் பெண்களில் பெரிய மேதைகள் இருந்து வந்திருக்கிறார்கள். கார்க்கி, மைத்ரேயி, லோபா, முத்திரை போன்ற வேத காலத்துப் பெண்கள் எல்லாம் வேதத்துக்குத் தங்களாலியன்ற பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள்.*

*கம்பன் படைத்த பெண் பாத்திரங்கள் அனைவருமே உணர்வு பூர்வமானர்கள். அவரவர் பண்பின் அடிப்படையில் படைக்கப்பட்டவர்கள். அன்பு, பாசம், பரிவு, காதல், கற்பு, தியாகம் என்ற உயர் பண்புகளையும், வஞ்சனை, சூழ்ச்சி, காமம் போன்ற முரண்பட்ட உணர்வுகளையும் கொண்ட பெண்களையே கம்பன் காவியத்தல் நாம் சந்திக்கினறோம். பொதுவாகப் பெண்களைப் பெருமைப்படுத்திப் பேச முனைகிறபோது "மாதரசிகள்" என்ற குறிப்பிடுவதுண்டு. இங்கு பேசப்படவிருக்கும் பெண் கதைமாந்தர்கள் உண்மையிலேயே மாதரசிகள். இராமகாதையே அயோத்தி, கிஷ்கிந்தை, இலங்கை என்ற மூன்று இராஜ்ஜியங்களை உள்ளடக்கிய, ஆங்காங்கே நிகழும் சம்பவங்களைக் கொண்ட பெருங்காப்பியம். இந்த மூன்று இராஜ்ஜியங்களிலும் நாம் சந்திக்கின்ற அரச குல மாதர்களே இங்கு இந்த மங்கையர் மங்கலத்தில் இடம் பெறுகிறார்கள். கோக்களவைகும் முற்றத்தான் முதல் தேவி கோசலை, இளைய மென்கொடி சுமித்தரை, மலைக்குல மயில் தாரை, கற்பின் கனலி சீதை, வீடணன் திருமகள் திரிசடை, மயன் மகள் மண்டோதரி, ஆகியோரின் பண்புகளை பற்றிய கருத்துகள் கம்பராமாயணத்தில் இடம்பெறுகின்றன.*

**கோசலை:**

*கம்பன் காவியத்தில் சோகம் மிகவும் நிரம்பிய பெண் பாத்திரம் சீதையே என்று நாம் நினைத்து வருகின்றோம். ஆனால், அசோகவனத்து சீதையைக் காட்டிலும் சோகமே வடிவான பெண் கதாபாத்திரம் கோசலை,*

சுற்றத்தார் தேவரொடும் தொழ
நின்ற கோசலை
கோக்கள் வைகும் முற்றத்தான்
முதல் தேவி கோசலை
மூன்று உலகும் ஈன்ற கோசலை

*இவையெல்லாம் வெளித்தோற்றம்தான், ஆனால் அவள் ஆழ்மனமோ சோகப் புயல் வீசும் துயர்க்கடல். தயரதனின் முதல் மனைவியாக, முதல் தேவியாக கோசலம் புகுந்தவள் கோசலை. ஆனால் தயரதனின் அன்பில் முதன்மைப் பெற்றவள் இரண்டாம் மனைவியான கையேயி. கணவனின் அன்பை முழுவதும் அனுபவித்தறியாதவள் கோசலை பெற்றெடுத்த திருக்குமரன் இராமன் முடிபுனையும் செய்தியைத் தயரதன் முதன் முதலில் கோசலையிடம் தெரிவிக்கவில்லை, தன் மனதிற்கினிய மனையாள் கையேயிடமே கூறுகிறார். ஆனால் விதியின் பயனாக கையேயியின் மூலமாக கோசலை பெற்ற மகன் இராமன் பதிநான்கு ஆண்டுகள் வனம் செல்லவும் கையேயியின் மகன் பரதன் அயோத்தி நாட்டின் அரசனாக மூடிச்சூடவும் காட்சிப்படுத்துகிறார் கம்பர். ஆனால் கோசலைக்கு ஏற்பட்ட கடினமான சூழ்நிலையிலும் தான் பெற்றெடுத்த மகனைக் காட்டிலும் மேலானவன் பரதன் என்பதை மணிமுடி விழாவில் இன்முகத்துடன் வரவேற்கிறாள். இதற்கு சான்றாக,*

''ஒழுக்கம் உடையார்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்''

*என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க தூய வாயினை உடைய கோசலை உணர்ச்சி மிகுதியிலும் சொற்களை கவனமாக கையாண்டாள் என்று கம்பர் கூறுகிறார். கடலில் முழ்கியெடுத்த முத்துப் போலவே, கோசலை கொண்டானை அல்லாது வேறு ஒன்றும் அறியாத குலமகள்தான் இத்தகைய உயர்வுகளை எண்ணியே அம்பெருமாட்டியை கம்பன் கண்டெடுத்த இராமகாதையின் முதல் பெண்முத்தாகும்.*

**சுமித்தரை:**

''கம்பனுக்கு மேலோர்
கவிஞன் பிறப்பதில்லை
கம்பன் கவியின்றிக்
கன்னித் தமிழ்தான்
வாழ்வதில்லை'' *என்பார் கண்ணதாசன்.*

*கம்பனது பாத்திரங்கள் காலத்தின் சாத்திரங்களாக விளங்கக் காண்கின்றோம். தன் பாத்திரங்களுக்கு*

*அவர் உலக வரங்களை அளித்துள்ளார். தெ. பொ.மீ அவர்கள்*

*“பெண்மையே கம்பன் கண்ட கடவுள்” என்பார்*

*கம்பன் கண்ட நாடு பெண்டிர் நிறைந்த நாடு தயரதனுக்குச் சுமித்தரை வால்மீகியின் வாக்குப்படி இரண்டாம் மனைவி. ஆனால் இளையவளான கையேயியின்பாலுள்ள மோகத்தால் அல்லஞ் தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றவே தயரதன் இராமனைக் காட்டிற்கு அனுப்பினாரென்ற புகழ் கிடைக்கக் கம்பன் சுமித்தரையை இளையவளாகப் படைக்கின்றார்.*

*“போர்வாள் அரசர்க்கு இறைபொய்த்தனன் ஆக்கில்லேன்” – சக்கரவர்த்தியைப் பொய்யனாக்க நான் விரும்பவில்லை என்ற இராமன் கூற்று. இந்த ஒன்றை வரி இராமனுடன் சுமித்தரை பெற்ற மகன் இலகுமணனையும் வனத்திற்கு செல்ல முடிவெடுக்கப் போதுமானதாக இருந்தது. உணர்வுப் புரவிகளுக்கு அறிவுக் கடிவாளமிட்டுத் தீர்க்கமான முடிவிற்கு வந்தவளாய்..*

‘‘ஆகாதது அன்றால் உனக்கு அவ்வனம் இவ்வயோத்தி
மாகாதல் இராமன் அம்மன்னவன் வையம் ஈந்தும்
போகா உயிர்த்தாயர் நம்பூங் குழற்சீதை என்றே
ஏகாய்; இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்என்றாள்’’

*மன்னன் பதவியை அப்போதுதான் துறந்துவிட்டு வந்தான் இராமன். அவனை மன்னவன் என்று குறிக்கும் சுமித்தரையின் மன உறுதியை காட்சிப்படுத்தியுள்ளார் கம்பர். கையேயி, தயரதன் ஏன் இந்த உலகமே இராமனது கீரடத்தைப் பறித்தாலும் காடு சென்ற இராமனே சுமித்தரையின் மன்னன் வாய்ப்பு நேர்நதபோது யாரையும் குறையாகவோ பழியாகவோ ஒரு வார்த்தைக்கூட கூறாமல் தன் மனக்கருத்தை உறுதியாக அழுத்தமாகக் கூறுகிறாள்.*

‘‘பின்னும் பகர்வார்;மகனே ! இவன்பின் செல்;தம்பி
என்னும் படியன்று, அடியாரின் ஏவல்செய்தி’’

*வனம் செல்லும் இராமனுக்கு இலக்குமணன் தம்பி என்றால், அவனை காக்கும் பொறுப்பு இராமனுக்கு வந்துவிடும். அச்சுமை கூடவே கூடாது என்று இராமனுக்கு அடியாரைப் போன்றே இலகுமணனை வனம் செல்ல் அனுப்புகின்றாள் சுமித்தரை. தாய் என்ற வார்த்தையைவிடப் பெரியவளாக, அது தரும் அர்த்தத்தைவிட ஆழமானவளாக, எடைமிகுதியான நெஞ்சினளாக, கம்பனை கவர்ந்தவளாக சுமித்தரை என்னும் பெண் முத்து விளங்குகின்றது.*

**சீதை:**

*பெண்ணின் பெருமையைப் போற்றும் வகையில் சிறையிருந்த செல்வியாகிய சீதையின் ஏற்றத்தைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் இராமாயணக் காப்பியம் முழுமையும் பாடுகின்றார். உலகில் பெண்ணை விடச் சிறந்த பொருள் இல்லை என்பதை விளக்க,*

‘‘பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை யுண்டாகப் பெறின்’’ *என்றார் வான்மறை தந்த வள்ளுவர்.*

*கவியரசு கண்ணதாசனும் “இராமாயணம் பெண்களால் தொடங்கிப் பெண்களால் முடிக்கப்படும் காவியம்” எனப் போற்றுகின்றார்.*

மேதைமை சான்றாக மாதரார் வரிசையில் சீதையின் மேதைமை கம்பராமாயணத்தில் விளக்கம் பெறும் வகையைக் காண்போம். *அறிவு என்பது “தீது ஒரிஇ நன்றின்பால் உய்ப்பது” என்றும் “மெய் பொருள் காண்பது” என்றும் திருக்குறள் வழியில் விளக்குவார் வள்ளுவர். கவிச்சக்கரவர்த்தி கம்பர் தாம் காண் விரும்பிய இலட்சிய சமுதாயத்தை,*

‘‘ஏகம் முதற்கல்வி முளைத்து எழுந்து
எண்ணில் கேள்வி
ஆகம் முதல் திண்பணை போக்கி
அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பி
தருமம் மலர்ந்து
போங்க கனியொன்று பழுத்துது
போலுமென்ற’’

*என வருணிக்கின்றார். தனது இலட்சிய சமுதாயத்திற்கு வித்து கல்வி எனக் காட்டுகிறார். சீதையின் பிறப்பு பெண்மைக்கு மட்டுமின்றி ஆடவர் குலத் திலகமாகிய இராமன் பெருமைக்கும் பெருமை சேர்த்தது. இராமன் பெற்ற வெற்றிகள், வீரத்தால் விளைந்தது எனினும் அவற்றை விஞசும் நிலையில்*

*சீதையால் அவன் பெற்ற பேறு விளங்குகிறது. என்பார் கம்பர். கம்பராமாயணத்தில் கம்பன் கண்டெடுத்த முத்துகளில் சீதை என்னும் பெண்முத்து மிகவும் உயரந்த நிலையில் பொலிவுப் பெற்றுள்ளது.*

**தாரை:**

*தாரையை வால்மீகி காட்டும் விதம் வேறு. கம்பன் காட்டும் விதம் வேறு. அவள் வானரக்குலப் பெண், வாலியின் மனைவியும் ஆவாள். தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைச்சான்ற சொற்காத்தவளாக மிக உயர்ந்த நிலையில் காட்டடப்படுகிறாள். வாலி சுக்கீரவனிடம் பகைக்கொண்டு போருக்குச் செல்கிறான். பதியின் கோபத்தால் இழப்பு ஏற்படும் என்பதை முன்கூட்டியே தாரை அறிந்ததுப் போல் தடுக்கின்றாள். தாரை வாலியைத் தடுத்துதும் வாலி தாரையைப் பார்த்து அன்புடன் பேசுகின்றான்.*

“விலக்கலை விடுவிடு விரித்துளான் உரம்
கலக்கி அக்கடல் கடைந்து அமுது கண்டென
உலக்க இன்னுயிர் குடித்து ஒல்லை மீள்குவன்
மலைக்குல மயில்”

*சுக்கீரிவனிடம் போர் புரிந்து, அவன் நெஞ்சத்தை பிளந்து அவன் உயிரை குடித்து விரைவில் மீண்டு வருவேன் என்று வாலி கூறுகின்றான். வாலியின் இழப்பால் தற்காத்து தற்கொண்டாள் பேணி தகைசான்ற சொற்காத்து சோர்விலாத பெண் என்றும் வானரக்குலப் பெண்ணான தாரையை மயிலுக்கு ஒப்பான அழகுடையவள் என்று வர்ணிக்கின்றார் கம்பர். ஐந்தறிவு படைத்த வானரக்குலப் பெண்ணான தாரை கற்பொழுக்கத்தில் சிறந்தவளாக காட்சிப்படுத்தப்படும் விதம் மனிதப் பெண்ணினும் மேலாக, பகைவனையும் வாழ வைத்த தெய்வப் பெண்ணாக தாரையைக் கம்பன் உயர்த்திவிட்டான் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.*

**முடிவுரை:**

*கம்பன் கண்டெடுத்த பெண் முத்துக்கள் காவியத்தின் ஆரம்பத்திலேயே வருகின்ற பாத்திரங்கள் சில, இடையில் வருகின்ற பாத்திரங்கள் சில. காவியத்தின் இறுதியில் வருகின்ற பாத்திரங்கள் சில. கோசலை, சுமித்தரை, சீதை இவர்களை கம்பராமாயண காவியத்தின் ஆரம்பத்திலேயே சந்தித்துவிடுகிறோம். காவிய நாயகியாம் சீதையை காவியத்தின் இறுதி வரை சந்தித்துக் கொண்டே இருக்கிறோம். எந்த ஒரு பாத்திரத்தைச் சுண்டினாலும் கம்பநாதம் கேட்கிறது. காவியத்தின் மிகப்பெரிய வெற்றி. கம்பன் கண்டெடுத்த பெண் முத்துக்களின் பண்புகளை ஆய்வுக்கட்டுரை மூலம் வெளிக்கொண்டு வந்தமைக்கு மிக்க நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

### மேற்கொள் நூல்கள்


1. கம்பராமாயணம் (முழுத் தொகுப்பு) – வை மு கோபாலகிருஷ்ணமாச்சிரியார், உமா பதிப்பகம் – 2017
2. கம்பன் களஞ்சியம் – ச சிவகாமி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 2009.
3. எங்கள் பார்வையில் கம்பன் –கம்பன் கழகம் – திருப்பத்தூர். 2023
4. கம்பன் உணர்த்தும் பரம்பொருள் நிலை – சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார் வானதி பதிப்பகம் 1991.
5. கம்பரும் காந்தியடிகளும் – ம பொ சிவ ஞானம் சேகர் பதிப்பகம் 1981
6. கம்பன் படைத்த பாத்திரங்கள் –கம்பன் கழகம் – திருப்பத்தூர். பாரதி புக் ஹவுஸ் 2021.
7. கம்பன் – பன்முகப் பார்வை – சாலமன் பாப்பையா. வைகை அச்சகம் 2004.